www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com

12ஆம் வகுப்பு

# அரசு பொதுத்தேர்வு மார்ச் - 2025
## மொழிப்பாடம் - பகுதி I - தமிழ்

கால அளவு : 3.00 மணி நேரம் ] (வினாத்தாள் விடைகளுடன்) [ மொத்த மதிப்பெண்கள் : 90

**அறிவுரைகள் :** (1) அனைத்து வினாக்களும் சரியாகப் பதிவாகி உள்ளதா என்பதனைச் சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.
(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும், அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும்.

**குறிப்பு :** விடைகள் தெளிவாகவும், குறிப்பிட்ட அளவினதாகவும், சொந்த நடையிலும் அமைதல் வேண்டும்.

### பகுதி - I

**குறிப்பு : அனைத்து** வினாக்களுக்கும் விடை தருக. [14 × 1 = 14]

**1.** இலக்கியத்தையும் மொழியையும் ஒருசேரப் பேசுகின்ற இலக்கண நூல் :
அ) தொல்காப்பியம்
ஆ) யாப்பருங்கலக்காரிகை
இ) நன்னூல்
ஈ) தண்டியலங்காரம்

**2.** குறிப்புகளில் மறைந்திருக்கும் தமிழறிஞரைக் கண்டுபிடிக்க.
தமிழறிஞர்; முதலிரு எழுத்துகளால் மறைக்கலாம்.
அ) மறைமலையடிகள் ஆ) தமிழ் ஒளி
இ) சூடாமணி ஈ) கோதை

**3.** "உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே"
- இந்நூற்பா இடம்பெற்ற இலக்கண நூல்:
அ) தொல்காப்பியம் ஆ) நன்னூல்
இ) இலக்கண விளக்கம் ஈ) அகத்தியம்

**4.** உலகநாடுகள் மாற்று ஆற்றலை நோக்கிச் சென்றால் மட்டுமே புவிவெப்பமயமாதலைக் கட்டுப்படுத்த முடியும் - இத்தொடர் உணர்த்துவது :
அ) காலநிலை மாறுபடுகிறது
ஆ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
இ) புவியின் இயக்கம் வேறுபடுகிறது
ஈ) பசுமைக்குடில் வாயுக்கள் அதிகமாகிறது

**5.** பொருத்தி விடை தேர்க.

| | | | |
|---|---|---|---|
| (1) வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் | (i) | சேர்ந்தாரைக் கொல்லி |
| (2) பயன்தூக்கார் செய்த உதவி | (ii) | ஞாலத்தின் மாணப்பெரிது |
| (3) சினம் | (iii) | தெய்வத்துள் வைக்கப்படும் |
| (4) காலத்தினாற் செய்த நன்றி | (iv) | நன்மை கடலின் பெரிது |

அ) (1)-(iv), (2)-(i), (3)-(ii), (4)-(iii)
ஆ) (1)-(iv), (2)-(iii), (3)-(ii), (4)-(i)
இ) (1)-(ii), (2)-(iii), (3)-(iv), (4)-(i)
ஈ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)

**6.** "எங்கள் தந்தையர் நாடென்ற பேச்சினிலே - ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே" - என்னும் பாரதியின் பாடல் வெளிப்படுத்துவது :
அ) தாய்வழிச் சமூகமுறை
ஆ) தனிக்குடும்ப முறை
இ) தந்தைவழிச் சமூகமுறை
ஈ) விரிந்த குடும்ப முறை

**7.** "காவினெம் கலனே; சுருக்கினெம் கலப்பை"
- இத்தொடரில் 'கலன்' உணர்த்தும் பொருள் :
அ) இசைக்கருவி ஆ) போர்க்கருவி
இ) வேளாண் கருவி ஈ) தச்சுக்கருவி

**8.** "காலை இளம் வெயில்
நன்றாக மேய
தும்பறுத்துத்
துள்ளிவரும்
புதுவெயில்" - என்ற கவிதையில் பயின்று வரும் படிமம் :
அ) மெய்ப்படிமம் ஆ) பயன் படிமம்
இ) உருப்படிமம் ஈ) வினைப்படிமம்

**9.** ஈற்றடி எழுதித் துளிப்பாவை நிறைவு செய்க.
வானம் அழுகிறது
பூமி சிரிக்கிறது .................
அ) ஒளி ஆ) மேகம்
இ) மின்னல் ஈ) மழை

**10.** மேடையின் மேலிருந்து வேண்டும்போது கீழே இறக்கும் வகையில் அமைக்கப்படும் திரை :
அ) இரு முகத்திரை ஆ) கரந்துவரல் திரை
இ) பொருமுகத்திரை ஈ) ஒரு முகத்திரை

**11.** "மழை மேகத்தைக் கண்ட மயில் போல
நீலவண்ணனைக் கண்ட குந்தி" - இத்தொடரில் வெளிப்படும் மெய்ப்பாடு :
அ) பெருமை ஆ) சிரிப்பு
இ) மகிழ்ச்சி ஈ) வியப்பு

**12.** காப்பியத்தின் பெரும்பிரிவைக் குறிப்பது :
அ) சருக்கம் ஆ) காதை
இ) இலம்பகம் ஈ) காண்டம்

**13.** பின்வருவனவற்றுள் தொன்மத்திற்குப் பொருந்தாத ஒன்றைத் தேர்க.
அ) இந்த நாரதரிடம் எச்சரிக்கையாக இரு.
ஆ) கர்ணன் தோற்றான் போ.
இ) இந்தா போறான் தருமன்.
ஈ) வயதில் சிறியவர், ஆனாலும் தலைவர்!

**14.** ஒருவருடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது :
அ) வாகைத்திணை ஆ) பாடாண் திணை
இ) காஞ்சித்திணை ஈ) பொதுவியல் திணை



enquiry@surabooks.com PH:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**பகுதி - II – பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. [3 × 2 = 6]

15. வாடைக்காலத்தில் விலங்குகளும் பறவைகளும் எவ்வாறு வருந்தின?
16. செல்வம் இருப்பதற்கான வழியாக வள்ளுவம் உரைப்பன யாவை?
17. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' - விளக்கம் தருக.
18. "உவா உற வந்து கூடும்
உடுபதி, இரவி ஒத்தார்"- இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. [2 × 2 = 4]

19. 'ஆளுக்கொரு மரம் வளர்ப்போம்' என்னும் முழக்கத்தொடர் வாயிலாக நீங்கள் வலியுறுத்தும் கருத்துகளை எழுதுக.
20. பருவத்தே பயிர் செய் - நேர மேலாண்மையோடு பொருத்தி எழுதுக.
21. 'சேய்மைக் காட்சித் துணிப்பு' என்றால் என்ன?

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் ஏழனுக்கு** விடை தருக. [7 × 2 = 14]

22. முடிந்தால் தரலாம், முடித்தால் தரலாம் - இவ்விரு சொற்றொடர்கள் உணர்த்தும் பொருளை அறிந்து தொடர் அமைக்கவும்.
23. உவமைத் தொடரைச் சொற்றொடரில் அமைத்து எழுதுக.
"கிணற்றுத் தவளை போல"
24. மயங்கொலிச் சொற்களை ஒரே தொடரில் அமைத்து எழுதுக.
மணம், மனம்
25. திருவளர்செல்வன், திருவளர் செல்வன் - இவற்றில் சரியான தொடர் எது? அதற்கான இலக்கண விதி யாது?
26. பொருத்தமான வேற்றுமை உருபுகளைச் சேர்த்து முறையான தொடர்களாக ஆக்குக.
1. காலை எழுந்து படித்து நமக்கு நன்மை ஏற்படும்.
2. சான்றோர் மதிப்பு கொடுத்து வாழ்வு உயரலாம்.
27. ஏதேனும் ஒரு சொல்லைப் பிரித்தும் சேர்த்தும் தொடரமைக்க.
அ) வெங்காயம் ஆ) அந்தமான்
28. கலைச்சொல்லாக்கம் தருக.
அ) Artist ஆ) Subscription
29. ஏதேனும் ஒன்றனுக்குப் புணர்ச்சி விதி தருக.
அ) அருங்கானம் ஆ) ஏழையென
30. ஏதேனும் ஒன்றனுக்குப் பகுபத உறுப்பிலக்கணம் தருக.
அ) சாற்றி ஆ) தொழுதனர்

**பகுதி - III – பிரிவு - 1**

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு** விடை தருக. [2 × 4 = 8]

31. 'நீர்நிலைகளிலிருந்து உதடுகள் குவித்து
உறிஞ்சுகிறது ஒளிக்கதிர்கள்' - இக்கவிதையின் அடி, 'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்னும் நாட்டுப்புறப் பாடலின் தொடர்ச்சியாய் அமைவதைப் பற்றி எழுதுக.
32. குகனோடு ஐவராகி, வீடணனோடு எழுவரான நிகழ்வுகளைச் சுட்டிக் காட்டுக.
33. சிரிப்பு, சினம், வியப்பு, அச்சம் ஆகியவற்றுள் எவையேனும் இரண்டு மெய்ப்பாடுகள் தோன்றுவதற்கான சூழ்நிலையைக் கற்பனையாகப் படைக்க.
34. 'ஈசன்மகன் நின்றனர் ஓர் ஏழையென ஓர்மின்' இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

**பிரிவு - 2**

**குறிப்பு : எவையேனும் இரண்டனுக்கு** மட்டும் விடை தருக. [2 × 4 = 8]

35. மழைவெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக்கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளைக் குறிப்பிடுக.
36. தாயும் தந்தையும் பணிக்குச் செல்லும் இன்றைய சூழலில் குடும்ப உறுப்பினர் என்ற முறையில் நீங்கள் குடும்பத்துக்குச் செய்யும் உதவிகள் யாவை?
37. சென்னையின் புகழுக்குச் சான்றாக நிற்கும் கல்வி நிறுவனங்கள் குறித்து எழுதுக.
38. மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் உருவாக்கித் தருக.

**பிரிவு - 3**

**குறிப்பு : எவையேனும் மூன்றனுக்கு** விடை தருக. [3 × 4 = 12]

39. அ) பொருள் வேற்றுமை அணியைச் சான்றுடன் விளக்குக.

**அல்லது**

ஆ) எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.
-இக்குறட்பாவில் பயின்றுவரும் அணியை விளக்குக.

40. இலக்கிய நயம் பாரட்டுக. (பாடலின் மையக்கருத்தோடு எவையெனும் மூன்று நயங்களையும் எழுதுக.)

பிறப்பினால் எவர்க்கும் - உலகில்
பெருமை வாராதப்பா!
சிறப்பு வேண்டுமெனில் - நல்ல
செய்கை வேண்டுமப்பா!
நன்மை செய்பவரே - உலகம்
நாடும் மேற்குலத்தார்!
தின்மை செய்பவரே - அண்டித்
தீண்ட ஒண்ணாதார்! **– கவிமணி தேசிக விநாயகம்**

41. அ) பாடாண் திணையைச் சான்று தந்து விளக்குக.

**அல்லது**

ஆ) கூதிர்ப்பாசறைத் துறையைச் சான்றுடன் விளக்குக.

42. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வில் அமைத்து எழுதுக.
அ) தினை விதைத்தவன் தினை அறுப்பான்.
வினை விதைத்தவன் வினை அறுப்பான்.

**அல்லது**

ஆ) எறும்பு ஊரக் கல்லும் தேயும்

43. கீழ்க்காணும் பத்தியைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்க.

பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியப் பகுதியில் ஏற்பட்ட மிகக்கொடிய பஞ்சத்தை தாது வருடப் பஞ்சம் என்று, இன்றும் நினைவுகூர்வர். ஒரு கோடி மக்கள் பஞ்சத்தின் பிடியில் சிக்கி இறந்திருக்கலாம் எனப் பதிவுகள் கூறுகின்றன. இதைக் கண்டு மனம் பொறுக்காத தமிழர் ஒருவர் மனமுவந்து தமது சொத்துகள் அனைத்தையும் கொடையளித்தார். இதனைப் போற்றும் விதமாகக் கோபால கிருஷ்ண பாரதியார், 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றி அவரைப் பெருமைப்படுத்தினார். அவர்தான், நீதிபதி மாயூரம் வேதநாயகம். இவர், மொழி பெயர்ப்பாளராகவும் நாவலாசிரியராகவும் பெயர் பெற்றவர்; தமிழின் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை இயற்றியவர்.

enquiry@surabooks.com PH:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**வினாக்கள் :**

1. 'நீயே புருஷ மேரு...' என்ற பாடலை இயற்றியவர் யார்?
2. பத்தொன்பதாம் நூற்றாண்டில் தென்னிந்தியாவில் ஏற்பட்ட கொடிய பஞ்சம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?
3. தமிழின் முதல் நாவல் எது?
4. 'தானம் அளித்தார்' என்ற தொடருக்கு நிகராகப் பத்தியில் உள்ள தொடரை எழுதுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும்** விடை தருக. [3 × 6 = 18]

**44.** அ) தமிழின் சீரிளமைத்திறம் வியந்து கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் கூறுவனவற்றைத் தொகுத்து எழுதுக. **அல்லது**

ஆ) செய்ந்நன்றியறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணைகொண்டு நிறுவுக.

**45.** அ) புயல் தாக்கத்தினால் குடியிருப்புகளுக்கு அருகில் அறுந்து கிடக்கும் மின் இணைப்புகளைச் சரி செய்யக் கோரி உங்கள் ஊர் மின்வாரியப் பொறியாளருக்குக் கடிதம் எழுதுக. **அல்லது**

ஆ) நிருவாக மேலாண்மை குறித்து வெ.இறையன்பு கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**46.** அ) 'கோடை மழை' கதை வாயிலாக விளக்கப்படும் மனிதநேயப் பண்புகளை விளக்குக.

**அல்லது**

ஆ) 'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்... கதையைத் தொடர்ந்து எழுதி முடிக்க.

## பகுதி - V

**47. அடிபிறழாமல் செய்யுள் வடிவில் விடை தருக.** [4 + 2 = 6]

அ) ''ஓங்கலிடை வந்து'' எனத் தொடங்கும் தண்டியலங்காரப் பாடலை எழுதுக.

ஆ) 'வரும்' என முடியும் குறளை எழுதுக.

## விடைகள்

## பகுதி - I

1. அ) தொல்காப்பியம்
2. அ) மறைமலையடிகள்
3. அ) தொல்காப்பியம்
4. ஆ) கார்பன் அற்ற ஆற்றல் பயன்பாடே தேவையாகிறது
5. ஈ) (1)-(iii), (2)-(iv), (3)-(i), (4)-(ii)
6. இ) தந்தைவழிச் சமூகமுறை
7. அ) இசைக்கருவி
8. ஈ) வினைப்படிமம்
9. ஈ) மழை
10. ஆ) கரந்துவரல் திரை
11. இ) மகிழ்ச்சி
12. ஈ) காண்டம்
13. ஈ) வயதில் சிறியவர், ஆனாலும் தலைவர்!
14. ஆ) பாடாண் திணை

## பகுதி - II - பிரிவு - 1

15. **வாடைக்காலத்தில் விலங்குகளும் பறவைகளும் அடைந்த துன்பங்கள் :**

(i) விலங்குகள் குளிர்மிகுதியால் மேய்ச்சலை மறந்தன.
(ii) குரங்குகள் குளிரால் நடுங்கின.
(iii) மரங்களில் தங்கியிருந்த பறவைகள் நிலத்தில் வீழ்ந்தன.
(iv) பசுக்கள் பாலூண்ண வந்த கன்றுகளைத் தவிர்த்தன.

16. ஒருவருடைய செல்வம் குறையாமல் இருப்பதற்கான வழி எது என்றால், அவர் பிறருடைய கைப்பொருளை விரும்பாது இருத்தலாகும்.

17. (i) மழைக்காலத்தில் வெட்ட வெளியில் பரவியுள்ள தூசுகள் மறைந்து விடுகின்றன.
(ii) மழை பெய்து நின்றவுடன் வரும் சூரிய ஒளியானது வெண்மையாகத் தோன்றுகிறது. அதனால் நகரம் பட்டை தீட்டிய வெள்ளை நகரமாகத் தெரிகிறது.

18. **இடம் :** கம்பராமாயணம், கிட்கிந்தா காண்டம் - நட்பு கோட்படலத்தில் கம்பர் கூறுவது.

**பொருள்:** அமாவாசைக் காலத்தில் ஒன்றாக இணைந்திருக்கிற சந்திரனையும், சூரியனையும் போல இராமனும் சுக்ரீவனும் ஒத்திருந்தார்கள்.

**விளக்கம் :** சீதையைத் தேடிவரும் இராம இலக்குவரைக் கண்ட அனுமனின் மூலமாக அவர்களுக்கு சுக்ரீவனின் அறிமுகம் கிடைத்தது. வானரங்களின் அரசனான சுக்ரீவனை இராமன் நண்பனாக ஏற்றுக் கொண்டான். இராவணனை அழிப்பதற்குத் தானும் தன்னுடைய படைகளும் இராமனுக்கு உறுதுணையாக இருப்பதாக வாக்களிக்கிறான். அதனால் இருவரையும் சந்திரன் சூரியன் என்று கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

## பிரிவு - 2

19. (i) ஆளுக்கொரு மரம் வளர்க்க வேண்டிய தேவை இன்று ஏற்பட்டுள்ளது.
(ii) மரங்கள் காற்றினைத் தூய்மை செய்கின்றன. மேலும் நிழல் தருகின்றன.
(iii) மரங்கள் வளர்ப்பதால் மண் அரிப்பை தடுக்க முடியும். நீர் ஆதாரங்கள் காக்க முடியும்.
(iv) "மரம் வளர்ப்போம், மழை பெறுவோம்" இதை நாம் அழிக்க கூடாது. மாறாக அதைக் காப்பாற்ற வேண்டியது நமது கடமை ஆகும்.

20. ஏற்ற காலத்தை அறிந்து ஏற்ற இடத்தையும் தெரிந்து ஒரு செயலை மேற்கொண்டால் உலகத்தையே அடைய நினைத்தால் அது கைகூடும். அதுபோல சரியான பயிரைத் தேர்ந்தெடுத்து, உரிய நேரத்தில் விதைத்தால் அதிக விளைச்சலைப் பெறமுடியும்.

21. (i) நம் கண்கள் இன்னும் கொஞ்சம் சுருங்கி, பொருள்கள் அசைவதைத் தொலைவிலிருந்து பார்த்துப் பதிவு செய்வதைத் திரைப்படத்தில் சேய்மைக் காட்சித்துணிப்பு (Long Shot) என்று அழைப்பர்.
(ii) **சான்று :** பேருந்தைப் பிடிக்க சாலையைக் கடக்கும்போது சாலையின் இருபக்கங்களிலும் பார்ப்பது.

## பிரிவு - 3

22. (i) நான் இன்று மாலை ஊருக்கு **முடிந்தால்** வருவேன். உன்னிடம் இருக்கும் புத்தகங்களை எனக்கு **தரலாமே.**
(ii) இவ்வேலையை செய்து **முடித்தால்** பரிசு **தரலாம்.**

23. **கிணற்றுத்தவளைபோல: (அறியாமையில் வாழ்வது)**
**கிணற்றுத் தவளை போல்** உலக நடப்புகளை அறியாமல் வாழ்பவர் வாழ்க்கையில் வெற்றி பெறுவது கடினம்.

24. மணம், மனம் - தோட்டத்தில் பூத்திருக்கும் மல்லிகையின் **மணம்** என் **மனதைக்** கவர்ந்தது.

25. (i) 'திருவளர் செல்வன்' சரியான தொடர் ஆகும்.
(ii) 'திருவளர் செல்வன்' என்பது வினைத்தொகை. வினைத்தொகைச் சொல்லுக்கிடையில் வல்லினம் மிகக்கூடாது.

enquiry@surabooks.com PH:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



26. 1. காலையில் எழுந்து படித்தால் நமக்கு நன்மை ஏற்படும்.
2. சான்றோர்க்கு மதிப்புக் கொடுத்து வாழ்ந்தால் வாழ்வில் உயரலாம்.

27. அ) வெங்காயம்
சிறிய **வெங்காயம்** உடலுக்கு நல்லது.
வெங் + காயம் - போரினால் ஏற்பட்டது.(வெங் + காயம் - பெருங்காயம்)
ஆ) அந்தமான்
அந்தமான் என்பது வங்காள விரிகுடாவில் உள்ள தீவுக் கூட்டமாகும்.
அந்த + மான் - அந்த மான் ஒரு அடர்ந்த புல்வெளியைக் கண்டது.

28. அ) Artist - கவின்கலைஞர்
ஆ) Subscription - உறுப்பினர் கட்டணம்

29. அ) அருங்கானம் - அருமை + கானம்
**விதி 1** - ஈறு போதல் - அரு~~மை~~ + கானம்
**விதி 2** - இனமிகல் - 'ங்' தோன்றி அரு+ ங் + கானம்
அருங்கானம்
ஆ) ஏழையென - ஏழை + என
**விதி 1** - இ ஈ ஐ வழி யவ்வும் -ஏழை + ய் + என
**விதி 2** - உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே - ஏழை (ய் + எ) ன ய் + அ + யெ = ஏழையென.

30. அ) **சாற்றி – சாற்று + இ**
சாற்று - பகுதி
இ - வினையெச்ச விகுதி
ஆ) **தொழுதனர் – தொழு + த் + அன் + அர்**
தொழு - பகுதி
த் - இறந்தகால இடைநிலை
அன் - சாரியை
அர் - படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதி

**பகுதி - III - பிரிவு - 1**

31. (i) நீர்நிலைகளில் உள்ள நீரானது சூரியனின் ஒளிக்கதிர்களால் ஈர்க்கப்படுகிறது. இதனையே சூரியன் தன் உதடுகளைக் குவித்து நீரை உறிஞ்சுகிறது எனப் பாடியுள்ளார் கவிஞர்.
(ii) 'மூங்கில் இலைமேல் தூங்கும் பனிநீரே' 'தூங்கும் பனிநீரை வாங்கும் கதிரோனே' என்று நாட்டுப்புறப்பாடல் கூறுகிறது.
(iii) இப்பாடலடியில் மூங்கில் இலையின் நுனியில் பனித்துளிகள் இருக்கின்றன. அவை எல்லாம் சூரியனின் கதிர்கள் வெளிப்பட்டதும் நீராவியாக மாற்றம் பெறுகிறது என்பதை இரு பாடல்களும் உணர்த்துகின்றன.

32. "நாங்கள் நால்வர் உடன்பிறந்தவர்களாக இருந்தோம். குகனுடன் சேர்த்து நாங்கள் ஐவர் ஆனோம். பின்னர் மேருமலையைச் சுற்றி வரும் கதிரவனின் மகனான சுக்ரீவனுடன் அறுவர் ஆனோம். உள்ளத்தில் அன்புகொண்டு எங்களிடம் வந்த வீடணனே, உன்னுடன் சேர்த்து எழுவர் ஆனோம். புகுதற்கரிய கானக வாழ்வை மேற்கொள்ளும்படி என்னை அனுப்பிய உன் தந்தையாகிய தயரதன், இதனால் புதல்வர்களைக் கூடுதலாக அடைந்து பெருமை பெறுகிறான்". என்று இராமன் கூறினார்.

33. **சிரிப்பு :**
"புகழ்மிக்க நந்தி மன்னனின் புகழைப் பாடும் பாணனே! நீ எங்கள் வீட்டின் முன் விடியும் வரை, இரவு முழுவதும் பாடிக் கொண்டிருந்தாய். உன் குரல் என்று அறியாமல், என் தாய் காட்டில் பேய் அழுகிறது என்றாள்; மற்றவர்கள் நரி ஊளையிடுகிறது என்றனர்; என் தோழியோ நாய் குரைத்தது என்றாள்; இல்லை நீ பாடுகிறாய் என்று நான் கூறினேன்."
**வியப்பு :**
"இந்திரன் கோவலனோடு விண்ணுலகில் இருந்து இறங்கி வந்து கண்ணகிக்கு அவளுடைய அன்பான கணவனைக் காண்பித்து, அவளை விண்ணுலகிற்கு அழைத்துச் சென்ற வியப்பான காட்சியை எங்கள் கண்களால் கண்டோம்"

34. **இடம் :** எச்.ஏ. கிருட்டிணனார் இயற்றிய 'இரட்சணிய யாத்திரிகம்' என்னும் நூலில் இவ்வரி இடம்பெற்றுள்ளது.
**பொருள் :** இறைமகன் தன்னைப் பிறர் கயிற்றால் கட்டும்போது அதற்கு உடன்பட்டு நின்றார். தம்மீது பகை கொண்டு தனக்கு செய்த செயல்களைச் செய்த இம்மனிதர்களைப் பற்றி எண்ணினார். இதற்குக் காரணம் இரக்க குணமே.
**விளக்கம் :** இறைமகனார் அன்பு என்னும் உறுதியான கட்டிலிருந்து விடுபட முடியாமல்தான், எந்த உதவியும் பெற இயலாத ஓர் ஏழையைப் போல அமைதியுடன் நின்றார். இதை நீங்கள் எண்ணிப் பாருங்கள் என்று கவிஞர் கூறுகிறார்.

**பிரிவு - 2**

35. **மழை வெள்ளப் பாதிப்பிலிருந்து காத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் :**
(i) வெள்ள அபாயம் வரும் முன் வீட்டில் உள்ள மதிப்புமிக்க பொருட்களை பாதுகாக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.
(ii) மின் இணைப்புகளைத் துண்டித்து வைக்க வேண்டும்.
(iii) வீட்டில் தீ அணைப்புக் கருவிகளை வைத்திருக்க வேண்டும். மேலும் வீட்டில் உள்ள எரிவாயு இணைப்புகளைத் துண்டித்து வைக்க வேண்டும்.
(iv) குடும்ப நபர்கள் அனைவருக்கும் வெளியூரில் உள்ள நண்பர் ஒருவரின் தொடர்பு முகவரி தெரிந்து இருக்க வேண்டும்.
(v) அவசரகால தேவைக்காக வீட்டில் போதுமான அளவு அத்தியாவசிய பொருட்களைச் சேமித்து வைக்க வேண்டும்.
(vi) அவசர சிகிச்சைப் பெட்டி ஒன்று, மருந்துகள், தேவையான துணிகள், பூச்சி விரட்டிகள், கொசுவலைகள் ஆகியவற்றைத் தயார் நிலையில் வைக்க வேண்டும்.

36. (i) என் பெற்றோருக்கு உதவியாக பல வேலைகள் செய்வேன். என்னுடைய உடைகளை நானே துவைத்துக் கொள்வேன்.
(ii) அம்மாவும் அப்பாவும் இல்லாத நேரங்களில் வீட்டை சுத்தமாக வைத்துக் கொள்வேன்.
(iii) என்னுடைய தேவைகளை நானே பூர்த்தி செய்து கொள்வேன்.
(iv) வீட்டிலுள்ள சிறு சிறு வேலைகளை (சுத்தம் செய்தல், பாத்திரம் கழுவுதல், துணி துவைத்தல்) நானே செய்வேன்.
(v) வீட்டிற்குத் தேவையான பொருட்களை அருகிலுள்ள கடைக்குச் சென்று வாங்கி வருவேன்.

37. **சென்னையின் புகழுக்குச் சான்றாக நிற்கும் கல்வி நிறுவனங்கள்:**
(i) இன்று சென்னையின் புகழுக்குச் சான்றாக நிற்கும் பல்வேறு கல்வி நிறுவனங்கள் ஆங்கிலேயரால் ஏற்படுத்தப்பட்டவை.

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



(ii) 18ஆம் நூற்றாண்டிலேயே சென்னையில் ஐரோப்பிய முறைக் கல்வி கற்பிக்கும் நிறுவனங்கள் தோன்றின.

(iii) 1715இல் உருவான புனித மேரி தேவாலய தர்மப் பள்ளி ஆசியாவில் உருவான முதல் ஐரோப்பியக் கல்வி முறையிலான பள்ளியாகும். 19ஆம் நூற்றாண்டில் பள்ளிகள் பெருகின.

(iv) 1812இல் உருவான சென்னைக் கோட்டைக் கல்லூரி, 1837இல் தொடங்கப்பட்ட கிறித்துவக் கல்லூரி, 1840இல் உருவான பிரசிடென்சி பள்ளி (பின்னாளில் மாநிலக் கல்லூரி) போன்ற பல்வேறு கல்வி நிறுவனங்கள் சென்னையின் புகழுக்கு சான்றாக உள்ளன.

38. **மயிலை சீனி. வேங்கடசாமி நினைவுச் சிறப்பிதழுக்குச் செய்திகள் :**

(i) மயிலை சீனி. வேங்கடசாமி 16-12-1900 ஆம் ஆண்டு சென்னை மயிலாப்பூரில் பிறந்தார். இவரின் தந்தை சீனிவாசன் ஒரு சித்த மருத்துவர். இவரின் தமையனார் கோவிந்தராசன் ஒரு தமிழாசிரியர்.

(ii) தந்தையின் சித்த மருத்துவப் பின்புலம், தமையனாரின் தமிழ்ப் பின்புலம் ஆகியவையே இவரை வரலாற்றாய்வாளராக உருவாக்கியது. இவர் தொடக்கப் பள்ளியில் 25 ஆண்டுகள் ஆசிரியராகப் பணியாற்றினார்.

(iii) விபுலானந்த அடிகள், கா.சுப்பிரமணியர், திரு.வி.க, தெ.பொ.மீ, ச.த.சற்குணர் ஆகிய அறிஞர் பெருமக்களிடம் கொண்டிருந்த தொடர்பு காரணமாக இவரது ஆய்வுக் கட்டுரைகள் குடியரசு, ஊழியன், செந்தமிழ்ச்செல்வி, ஆரம்பாசிரியன், லக்ஷ்மி முதலான இதழ்களில் வெளியாகின.

(iv) சமயம், மானுடவியல், தமிழக வரலாறு, தொல்பொருள் ஆய்வு, கலை வரலாறு, மொழியாய்வு முதலான பல துறைகளிலும் இவர் கவனம் செலுத்தினார்.

(v) தமிழ்ப் பண்பாட்டிலும் தமிழர் வரலாற்றிலும் ஆழ்ந்த அக்கறை கொண்ட மயிலை சீனி. அவர்கள் தமிழ் பண்பாட்டின் தனித்தன்மையை நிறுவுவதில் உறுதியான பார்வை கொண்டவர்.

(vi) தம் வாழ்வை முழுமையாகத் தமிழியல் ஆய்வுக்கு ஒதுக்கியவர். நாம் தாழாமல் இருக்கத் தம்மைத் தாழ்த்திக் கொண்டவர். நமது பெருமைகளை ஆய்வு நோக்கில் விரித்துரைத்தவர். நமது சுய அடையாளங்களை மீட்டுத் தந்தவர்

**பிரிவு - 3**

39.

அ) **பொருள் வேற்றுமை அணி – விளக்கம்**

இரு வேறு பொருள்களுக்கு இடையே ஒற்றுமையைக் கூறிப் பின்னர் வேறுபடுத்திக் காட்டுவது 'பொருள் வேற்றுமை அணி' ஆகும்.

**எடுத்துக்காட்டு:**

ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலி நீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ்! - தண்டி

**அணிப்பொருத்தம்:** தமிழுக்கும் கதிரவனுக்கும் இடையேயுள்ள ஒற்றுமைகளை முதலில் கூறிப் பின்னர் 'தமிழ் தன்னிகர் இல்லாதது' என்று வேறுபடுத்தியுள்ளதால் இது பொருள் வேற்றுமை அணியாகும். இது வேற்றுமை அணியின் ஒரு பிரிவாகும்.

**அல்லது**

ஆ) **அணிச்சுட்டல்:** சொற்பொருள் பின்வரும் நிலையணி பயின்று வந்துள்ளது.

**அணிவிளக்கம் :** செய்யுளில் முன்னர் வந்த சொல், அதே பொருளில் பின்னரும் பலமுறை வருவது சொற்பொருள் பின்வரும் நிலையணியாகும்.

**சான்று :** எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணியர் ஆகப் பெறின்.

**விளக்கம் :** ஒன்றை நினைத்தவர் மனவுறுதியுடையவராக இருந்தால், அவர் நினைத்ததை நினைத்தவாறே அடைவர்.

**அணிப்பொருத்தம் :** இக்குறட்பாவில் 'எண்ணிய' என்னும் சொல் நினைத்தல் என்ற ஒரே பொருளில் பலமுறை வந்துள்ளதால் இது சொற்பொருள் பின்வரு நிலையணிக்குப் பொருந்துவதாயிற்று.

40. **திரண்ட கருத்து :** இந்த மண்ணில் பிறந்ததால் மட்டுமே யாருக்கும் பெருமை வராது. உனக்கு சிறப்பு வேண்டுமென்றால் உன்னுடைய செய்கைகள் நல்லவையாக இருக்க வேண்டும். மக்களுக்கு நன்மை செய்பவர்களைத்தான் இந்த நாட்டில் மேல்சாதிக்காரர்கள் என்பர். தீமை செய்பவர்களைப் பார்த்தால் தீண்டத்தகாதவர்களைப் போல அனைவரும் ஒதுங்கிப் போவார்கள்.

**மையக் கருத்து :** நன்மை செய்பவர்களை இந்த நாடு போற்றும், தீமை செய்பவர்களை ஒதுக்கும்.

**மோனைத் தொடை :** பிறப்பினால் - பெருமை, சிறப்பு - செய்கை, நன்மை - நாடும், தின்மை - தீண்ட

**எதுகைத் தொடை :** பிறப்பினால் - சிறப்பு, நன்மை - தின்மை

**இயைபுத் தொடை :** வாராதப்பா - வேண்டுமப்பா, மேற்குலத்தார் - ஒண்ணாதார்

**அணிநயம் :** இயல்பு நவிற்சி அணி.

41.

அ) **திணை விளக்கம் :** பாடு + ஆண் + திணை + பாடாண் திணை பாடப்படுகின்ற ஆண் மகனுடைய புகழ், வலிமை, கொடை, அருள் போன்ற நல்லியல்புகளைச் சிறப்பித்துக் கூறுவது பாடாண் திணையாகும்.

**சான்று :**

காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே; புறம் (பிசிராந்தையார்)

**திணைப் பொருத்தம் :** குறைந்த நிலமாயினும் அதில் விளைந்த நெல்லை உணவாக்கி கவளமாக கொடுத்தால் யானைக்குப் பல நாள்களுக்கு உணவாகும். ஆனால் நூறு வயலாக இருந்தாலும் யானை தனித்து சென்று உண்டால் அது உண்ணும் நெல்லைவிட காலில் அழிந்து போதும் நெல்லே அதிகமாக இருக்கும். அது போல அறிவுடைய வேந்தன் மக்களிடமிருந்து வரியைத் திரட்டும் போது முறை அறிந்து செயல்பட்டால் மன்னனும், மக்களும் நாடும் சிறக்கும். இப்பாடலில் வரி திரட்டும் முறையை அறிந்த மன்னனின் நல்லியல்புகளை கூறுவதால் இது பாடாண் திணைக்குப் பொருத்தமாயிற்று.

**அல்லது**

ஆ) **துறை விளக்கம் :** கூதிர்ப்பாசறை என்பது போர்மேற் சென்ற அரசன் குளிர் காலத்தில் தங்கும் படைவீடு ஆகும்.

**சான்று :** மெய்க்கொள் பெரும்பனி நலிய பலருடன்
கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க

**சான்று விளக்கம் :** தம் மேனியின் குளிரினைப் போக்கப் பலரும் கூடி கைகளை நெருப்பில் காட்டிச் சூடேற்றினர். இடையர்களின் கன்னங்கள் புடைத்து நடுங்குமாறு குளிரின் தன்மை இருந்தது.

enquiry@surabooks.com PH:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**துறைப் பொருத்தம் :** ஆயர்கள் கூடி குளிரைப் போக்க நெருப்பில் குளிர்க் காய்வது போல, போர்மேற் சென்ற அரசன் குளிர்காலத்தில் தங்கும் படைவீடே கூதிர்ப்பாசறை ஆகும்.

42.

அ) **தினை விதைத்தவன் தினை அறுப்பான்.**
**வினை விதைத்தவன் வினை அறுப்பான்.**

**பழமொழி விளக்கம் :** நாம் பிறர்க்குச் செய்யும் வினைகளைப் பொருத்தே விளைவுகள் உண்டாகும். நற்செயல்களைச் செய்தால் நன்மையும் தீய செயல்களைச் செய்தால் தீமையும் விளையும். நாம் எதனை விதைக்கிறோமோ அதனையே நாம் அறுவடை செய்வோம். அதனைக் கூறும் பழமொழி 'தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்பதாகும்.

**வாழ்க்கை நிகழ்வு :** தரணி, தக்ஷன் என்ற இரு நண்பர்கள். தரணி எப்போதும் அனைவருக்கும் உதவி செய்வான், அனைவரையும் மரியாதையாக பார்ப்பான். மரியாதையாகவும் நடந்து கொள்வான். தக்ஷன் தரணியை;ப போல் இல்லாமல் அனைவரிடமும் கோபமாக பேசுவான். யாரையும் மதிக்க மாட்டான். யாருக்கும் உதவி செய்ய மாட்டான். ஒரு நாள் இருவருக்கும் வேலை கிடைத்தது. வேலையில் சேர முன் பணம் இரண்டாயிரம் கட்ட வேண்டி இருந்தது. இவர்கள் இருவரிடமும் பணம் இல்லை. தரணிக்கு உதவி செய்ய அனைவரும் முன் வந்தனர். நல்லது செய்தால் நல்லது நடக்கும். ஆனால் தக்ஷனுக்கு உதவி செய்ய யாரும் முன்வரவில்லை. இந்நிகழ்வு 'தினை விதைத்தவன் தினை அறுப்பான். வினை விதைத்தவன் வினை அறுப்பான்' என்ற பழமொழிக்கேற்ப உள்ளது.

**நீதி :** நாம் ஒருவருக்கு நல்லது செய்தால் நமக்கும் நன்மை நடக்கும். ஒருவருக்குத் தீமை செய்தால் நமக்கு தீமை நடக்கும் என்பதே பழமொழி உணர்த்தும் நீதியாகும். இருக்காது என்பதே பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

**அல்லது**

ஆ) **எறும்பு ஊரக் கல்லும் தேயும்**

**பழமொழி விளக்கம் :** முயற்சி உடையவர்கள் முயற்சியைக் கைவிடாது தம் நோக்கத்தில் உறுதியாய் இருந்தால் வெற்றி இலக்கை நிச்சயம் அடைவார்கள் என்ற பொருளை உணர்த்துகிறது இந்தப் பழமொழி. தொடர்ந்து முயற்சித்தால் மிகக் கடினமான செயலாக இருந்தாலும் எளிமையாக கூடி வரும் என்பதையே இந்தப் பழமொழி உணர்த்துகிறது.

**வாழ்க்கை நிகழ்வு :** சங்கீதா ஏழாம் வகுப்பு படிக்கும் மாணவி. ஏழ்மையான குடும்பத்தைச் சார்ந்தவள். அவளுக்குச் சரியாகப் படிக்க வராது. அவளை அவளுடைய வகுப்புத் தோழிகள் அனைவரும் ஏதாவது படிக்கச் சொல்லி அவள் படிப்பதைப் பார்த்துச் சிரிப்பார்கள். ஆனால் அதற்காக அவள் வருத்தப்படவில்லை. அவளை எல்லோரும் 'திக்குவாய்க்காரி' என்று கிண்டல் செய்தனர். வரும் பள்ளியின் ஆண்டு விழாவிற்கு சிறப்பான நாடகம் ஒன்றை ஏற்பாடு செய்யுமாறு தலைமை ஆசிரியர் மாணவிகளிடம் கூறிச் சென்றார். நாடகத்திற்கு மாணவிகள் விருப்பத்துடன் தங்கள் பெயரை வகுப்பாசிரியரிடம் கொடுத்தனர். சங்கீதாவும் நாடகத்திற்குத் தன் பெயரைக் கொடுத்தாள். உடனே ஆசிரியர் "உன்னால் ஒரு வார்த்தையே சரியாகப் பேச வராது. நீ நாடகத்தில் வசனம் பேசப் போகிறாயா? அதெல்லாம் ஒன்றும் வேண்டாம். நீ போ" என்று கூறிவிட்டார். ஆனால் சங்கீதா விட்டுவிடவில்லை. மாலையே ஆசிரியரின் வீட்டுக்குச் சென்று "நான் நன்றாகப் பேசுவேன். என்னையும் நாடகத்தில் சேர்த்து நடிக்க வையுங்கள்" என்றாள். ஆசிரியர் அவளிடம் ஒரு புத்தகத்தைக் கொடுத்து இதை "நீ திக்காமல் படித்துவிட்டால் உன்னை நாடகத்தில் சேர்த்து நடிக்க வைக்கிறேன். ஆனால் உன்னால் அது முடியுமா?" என்று கேட்டார். அன்றிலிருந்து தினமும் ஒரு மணி நேரம் ஆசிரியரிடம் அப்புத்தகத்திலுள்ள பகுதியைப் படித்து காண்பித்தாள். ஆசிரியரின் மனம் இளகியது. சங்கீதாவை நாடகத்தில் சேர்த்து அவளுக்கு ஏற்றாற்போல் நாடக வசனங்களை எழுதிக் கொடுத்து நடிக்க வைத்தார்.

பள்ளியின் ஆண்டு விழா நாளன்று நாடகத்தில் சங்கீதா பேசிய வசனங்களைக் கண்டு அனைவரும் கைதட்டி பாராட்டினர். நாடகம் சிறப்பாக இருந்ததற்கு சங்கீதாவின் பேச்சே காரணமாகும்.

**நீதி :** எந்தச் செயலும் முதலில் கடினமாகத் தெரிந்தாலும் அதைச் செய்யச் செய்ய எளிதாக மாறிவிடும் என்பதே இப்பழமொழி உணர்த்தும் நீதியாகும்.

43. 1. கோபால கிருஷ்ண பாரதியார்
2. தாது வருடப் பஞ்சம்
3. பிரதாப முதலியார் சரித்திரம்
4. கொடையளித்தார்

**பகுதி - IV**

44.

அ) **முன்னுரை :** இவ்வுலகில் எத்தனையோ மொழிகள் தோன்றின. அவற்றுள் பல அழிந்துவிட்டன. ஆனால் நம் தமிழ்மொழி பல ஊழிக்காலங்களைக் கடந்தும் நிலைத்து நிற்கிறது. அத்தகு பெருமைமிக்க தமிழ் மொழியினை, அதன் பெருமையைப் பேசாத கவிஞர்கள் இல்லை எனக் கூறலாம். கவிஞர் சிற்பி பாலசுப்பிரமணியம் தமிழின் பெருமைகளாகக் கூறியவற்றை இங்குக் காண்போம்.

**கவிஞர்களுக்குத் துணையாய் விளங்கும் தமிழ் :** செந்நிறக் கதிர்களை உடைய கதிரவன் மாலைநேரத்தில் மலையின் உச்சியில் சென்று மறைகின்ற காட்சியானது, செந்நிறப் பூக்காடு ஆகாயம் முழுமையும் நிறைந்திருப்பது போல் உள்ளது. உழைத்துச் சிவந்த தொழிலாளர்களின் கைகள், சிவந்த நிறமுடைய மாலை நேரத்து வானம் போல் உள்ளது. தொழிலாளர்களின் பருத்த தோள்கள் மீது பூத்திருக்கும் வியர்வைத்துளிகள் முத்துக்கள் போன்று உள்ளன. இக்காட்சிகளை எல்லாம் வியந்து பாடுவதற்கு செந்தமிழாகிய உன்னைவிட்டால் வேறு பொருத்தமான துணை உண்டோ? கூறிடுவாயாக! எனக் கேட்கிறார் கவிஞர்.

**தமிழின் பெருமைகள் :** கவிஞர்களின் உள்ளத்திலே பொங்கிப் பெருகி வரும் கவிதை உணர்வுகளுக்கு உயிராக விளங்கும் முத்தமிழே! தொன்மைக் காலத்தில் பாண்டியரின் சங்கத்தில் அரசியாக, அரியணையில் வீற்றிருந்தாய்! பாரி முதலான வள்ளல்கள் பலரை இவ்வுலகிற்கு அளித்து அறம் வளர்த்தாய்!

**தமிழ்த்தாயே வருக!:** மீண்டும் அந்தப் பொற்காலம் அமைவதற்கு தமிழ்க்குயிலாக மாறி மெய்சிலிர்க்க இன்னிசை பாடி வருக! தன்னை அடைத்து வைத்துள்ள கூண்டினை தகர்த்து எறிந்து விட்டு வீரத்துடன் வெளியே வரும் சிங்கம் போன்று உன் வளர்ச்சிக்குத் தடையாய் இருப்பவைகளை உடைத்து எறிந்து விட்டு, பொதிகை மலையில் வளர்ந்த தென்தமிழே வருக!

enquiry@surabooks.com PH:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



**முடிவுரை:** கால மாற்றங்களுக்கு ஏற்ப தன்னைப் புதுப்பித்துக் கொள்வதுடன், தன்னுடைய பழம் பெருமைகளையும் இழந்துவிடாமல் தமிழ் மொழி தரணியெங்கும் புகழ்மணம் வீச வேண்டும் என்பதைக் கவிஞர் வெளிப்படுத்தியுள்ளார்.

**அல்லது**

ஆ) **முன்னுரை :** செய்ந்நன்றி அறிதலே அறம் என்பதை வாயுறை வாழ்த்தின் துணை கொண்டு விளக்கம் தருவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**செய்ந்நன்றி அறிதல் :** தான் ஓர் உதவியும் செய்யாதிருந்தும் தனக்கு உதவி செய்த ஒருவருக்கு மண்ணுலகையும் விண்ணுலகையும் கைம்மாறாகக் கொடுத்தாலும் ஈடாகாது. உரிய காலத்தில் ஒருவர் செய்த உதவி அளவில் சிறியதாக இருந்தாலும் அது உலகத்தின் அளவை விட மிகப் பெரியதாகும். இன்ன பயன் கிடைக்கும் என்று ஆராயாமல் ஒருவர் நமக்குச் செய்த உதவியின் அன்புடைமையை ஆராய்ந்தால், அதன் நன்மை கடலை விடப் பெரிதாகும். ஒருவர் தினையளவாகிய உதவியைச் செய்த போதிலும் அதன் பயன் தெரிந்தவர்கள், அதனையே பனையளவாகக் கொண்டு போற்றுவர். ஒருவர் நமக்குச் செய்த நன்மையை மறப்பது நல்லதன்று; அவர் செய்த தீமையை அப்பொழுதே மறந்து விடுவது நல்லது. எந்த அறத்தை அழித்தவர்க்கும் தப்பிப் பிழைக்க வாய்ப்பிருக்கும்; ஒருவர் செய்த உதவியை மறந்து விட்டவர்க்கு உய்வே இல்லை.

**முடிவுரை :** செய்ந்நன்றி அறிதலை திருவள்ளுவர் உணர்ந்து பிறர் அறியும் வண்ணம் உரைத்துள்ளார். அவர்தம் கருத்துகளை ஏற்றுக் கொண்டு, அதன்படி நடந்தால் இவ்வுலகம் நம்மை மதிக்கும்.

45.
அ) 17-3-20xx

**அனுப்புநர்** ஆவடி

ச. நகுலன்
(ஊர்ப்பொதுமக்கள் சார்பாக)
நெ.1 பாரதியார் தெரு,
மாத்தூர் கிராமம், வெம்பாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

**பெறுநர்**

உயர்திரு. மின்வாரியப் பொறியாளர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
மாமண்டூர் கிராமம், வெம்பாக்கம் வட்டம்,
திருவண்ணாமலை மாவட்டம்.

மதிப்பிற்குரிய ஐயா,

**பொருள் :** புயல் தாக்கத்தினால் மின் இணைப்புகளைச் சரிசெய்யக் கோரி விண்ணப்பித்தல்.

வணக்கம்.

எங்கள் கிராமத்தில் சுமார் இரண்டாயிரம் வீடுகள் உள்ளன. சமீபத்தில் கஜா புயல் தாக்கத்தினால் எங்கள் வீடுகளுக்கு அருகில் மின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டும், மின் கம்பிகள் அறுந்தும் கிடக்கின்றன. போதிய மின்வசதி இல்லாத காரணத்தால் நோயாளிகள், வயதானவர்கள், குழந்தைகள் பெரிதும் பாதிக்கப்படுகின்றனர். எனவே அருள்கூர்ந்து அறுந்து கிடக்கும் மின் கம்பிகளைச் சரி செய்து மீண்டும் மின்வசதி செய்து தர வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

இங்ஙனம்,
தங்கள் உண்மையுள்ள
**நகுலன்**
(ஊர்ப்பொதுமக்கள் சார்பாக)

உறைமேல் முகவரி

| |
|---|
| உயர்திரு மின்வாரியப் பொறியாளர் அவர்கள்,<br>மின்வாரிய அலுவலகம்,<br>மாமண்டூர் கிராமம், வெம்பாக்கம் வட்டம்<br>திருவண்ணாமலை மாவட்டம். |

**அல்லது**

ஆ) **முன்னுரை :** ஒன்றை எப்படி மேலாண்மை செய்கிறோம் என்பதைப் பொருத்தே வெற்றியும் வளங்களும் தீர்மானிக்கப்படுகின்றன. நேரம், வேளாண், வணிகம், நிருவாகம், மேலான போன்ற மேலாண்மைகளைக் கையாள்வதில் தான் மனித சமூகம் உயிர்ப்பெற்று விளங்குகிறது. இங்கு வெ. இறையன்பு கூறும் நிருவாக மேலாண்மை குறித்துக் காண்போம்.

**நாலடியார் : "கல்லாரே யாயினும் கற்றாரைச் சேர்ந்தொழுகின் நல்லறிவு நாளுந் தலைப்படுவர்"**

(i) உயர் பதவியில் இருப்பவர்கள் எல்லாவற்றிலும் நிபுணத்துவம் பெற்றவர்களாக இருப்பது சாத்தியமில்லை.
(ii) ஆனால், யார் திறமைசாலிகள் என்று அறிந்து அவர்களை அருகில் வைத்துக் கொண்டால் போதும்.
(iii) யாருக்கு எது தெரியும் என்று தெரிந்திருப்பதும் அறிவு என்கிறது இந்த நாலடியார் பாடலடிகள்.

**ஷேக்ஸ்பியரின் நாடகம் :**

(i) டைமன் என்பவன் ஏதென்ஸ் நகரில் இருந்தான். வரவு குறைந்த போதும், அவன் செலவு செய்வதைக் குறைக்கவில்லை.
(ii) அவன் உதவியாளர் நிதி நிலைமையைப் பற்றிப் பேசவருகிற பொழுதெல்லாம் கேட்க மறுத்தான்.
(iii) ஒரு கட்டத்தில் கடன் கொடுத்தவர்கள் கழுத்தை நெரிக்கிறார்கள். ஆனாலும் அவன் வருந்தவில்லை.
(iv) தான் அளித்த விருந்தை உண்டவர்கள் உதவுவார்கள் என்று பொய்க்கணக்குப் போடுகிறான்.
(v) எங்குக் கேட்டும் பணம் கிடைக்கவில்லை. ஊருக்கு ஒதுக்குபுறமாகச் செல்கிறான். மனித இனத்தையே வெறுக்கிறான்.

**ஆன முதலில் அதிகம் செலவானால்**
**மானம் அழிந்து மதிகெட்டுப் – போனதிசை**
**எல்லார்க்கும் கள்ளனாய் ஏழ்பிறப்பும் தீயனாய்**
நல்லார்க்கும் பொல்லனாம் நாடு என்று ஔவையார் நல்வழி நிதியைக் கண்டபடி கையாள்பவருக்கு அறிவுறுத்துகிறார்.

நிருவாகத்தில் வரவே செலவைத் தீர்மானிக்க வேண்டும். வரவைத் தாண்டி நிறைய செலவு செய்பவன், அடுத்தவர்களிடம் கையேந்த வேண்டிய அவல நிலைக்குத் தள்ளப்படுவான் என்பதை ஷேக்ஸ்பியரும், ஔவையாரும் கூறுகின்றனர்.

**முடிவுரை :** இவ்வாறு இலக்கியங்களில் சொல்லப்பட்ட மேலாண் கருத்துகளையும் நிருவாக நெறிகளையும் நாம் உணரலாம், நாட்டின் முன்னேற்றம் மேலாண் சிந்தனையில் தொடங்குகிறது. மேலாண்மையில் சிறந்தால் ஒவ்வொரு தனி மனிதரும், நாடும் சிறந்து விளங்க முடியும் என்பதை வெ.இறையன்பு மிகத்தெளிவாக விளக்குகிறார்.

enquiry@surabooks.com PH:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com
www.surabooks.com



46.

அ) **முன்னுரை :** குழந்தைகள் பெற்றோரால் கொண்டாடப்படுகிறார்கள். பெற்றோர் என்ற சொல்லே 'பேறு பெற்றோர்' என்ற பொருள் கொண்டதுதான் எனலாம். தாய், தந்தை இல்லாத ஏதிலிக் குழந்தைகளின் நிலை மிகக் கொடியதாகும். அக்குழந்தைகளை ஏற்று வளர்க்கும் மனிதப் பண்பு வரவேற்கப்பட வேண்டிய ஒன்று. இப்பண்பை வெளிப்படுத்தும் 'சாந்தா தத்' அவர்களின் 'கோடை மழை' கதை நம்மை நெகிழ வைக்கிறது.

**மருத்துவமனையில் ஆறுமுகம் :** ஆறுமுகத்தின் மருமகள் நாலுநாள் காய்ச்சலில் இறந்துவிட்டாள். அவளைப் பிரிந்து வாழ இயலாமல் மகனும் விஷத்தை விழுங்கி இறந்துவிட்டான். அவர்களுடைய குழந்தையை ஆறுமுகம்தான் பார்த்துக் கொள்கிறார். குழந்தைக்கு உடல்நிலை சரியில்லாததால் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்கிறார். அங்கே தாயின் அணைப்பில் இருந்த ஒரு குழந்தையைப் பார்த்தார். அதனைப் பார்க்கவும் நினைக்கவும் மிகவும் பாந்தமாக இருந்தது. பெற்றவனையும் பிள்ளையையும் பார்க்க வேண்டிய தன் மகன் இப்படி இருவரையும் 'நட்டாத்துல விட்டுட்டுத் தன் வழியே சென்று விட்டானே' என எண்ணிக் கவலையுற்றார். தன்முறை வந்தபோது மருத்துவரிடம் குழந்தையைக் காட்டினார். நெஞ்சு சளி இருப்பதாகக் கூறி மருந்து எழுதிக் கொடுத்தார் மருத்துவர். ஊசியும் போட்டார்.

**மருந்துக்கடை பாபு :** மருத்துவமனையை விட்டு வெளியே வந்த ஆறுமுகம் தேநீர் அருந்தி தொண்டையை ஆசுவாசப்படுத்திக் கொண்டார். பிறகு மருந்துக் கடைக்குச் சென்றார். பாபு ஆறுமுகத்தை வரவேற்று குழந்தையை வாங்கிக் கொண்டான். "குழந்தைக்கு உடம்பு சரியில்லையா?" என்று கேட்டான். ஆறுமுகம் "மூணு நாளா சிரமப்படுது பாவம். டாக்டர் ஊசி போட்டு மருந்து எழுதிக் கொடுத்திருக்கிறார்' என்றார். "இப்போ உன்கிட்ட மருந்து வாங்க மட்டும் வரல பாபு..." சீட்டை நீட்டியபடி அமைதியாய் சொன்னவரை யோசனையுடன் பார்த்தான் பாபு.

**ஆறுமுகத்தின் முடிவு :** பாபு, ஏற்கனவே குழந்தையற்ற தம்பதியிடம் இக்குழந்தையை கொடுப்பது பற்றி ஆறுமுகத்திடம் பேசியிருந்தான். ஆறுமுகத்திற்குக் குழந்தையைப் பிரிய மனம் இல்லையென்றாலும், தாயின்றி இருக்க வேண்டாம் என முடிவெடுத்தார். அதனால் "குழந்தைக்குத் தாய்ப்பாசம் எவ்வளவு முக்கியம்னு எனக்குப் புரிஞ்சுது பாபு. என்னோட சுயநலத்துக்காக இதை அனாதையா விட்டுட்டுப் போறது எவ்வளவு பெரிய பாதகம்? அதான். அதுவும் இல்லாம அவங்க உனக்கு நல்லாத் தெரிஞ்சவங்க. அதனால பத்திரமான இடத்துக்குத்தான் போய்ச் சேருறது புள்ளைன்னு நிம்மதி. அவங்கள உடனே வரச் சொல்லிடு. ஆக வேண்டியதைப் பார்க்கலாம்" என்று பாபுவிடம் கூறிவிட்டு விடுவிடுவென நடந்தார்.

**ஆறுமுகத்தின் நம்பிக்கை :** பாபுவுடன் வந்த தம்பதியினரைப் பார்த்தபோது, பிள்ளைப் பாக்கியம், ஏக்கம்... தவிப்பு, எதிர்பார்ப்பு அத்தனையும் அம்முகங்களில் உணர்ந்தபோது பிள்ளையின் பாதுகாப்புக் குறித்த நம்பிக்கை வலுத்தது. அவருடைய நெருடல் எல்லாம் பிள்ளையைப் பிரிந்து இருக்க வேண்டுமே எனும் உதிரத்தை உறைய வைக்கும் உறுத்தல் மட்டுமே இருந்தது.

**வந்தவரின் பரிவுரை :** 'உங்களுக்குக் கவலையே வேணாம் ஐயா!" அப்பா என அழைக்கப்பட இருப்பவன் ஓரிரு கணம் போல் தயங்கி, "ஐயா ரொம்ப ரொம்ப பெரிய மனசோட எங்க வாழ்க்கைக்கு ஒரு நம்பிக்கை கொடுத்து இருக்கிறீங்க. நன்றி கூறுவதைவிட உதவி கேட்கிறேன். நீங்களும் எங்களுடன் வந்துவிடுங்கள். எங்க மூணு பேருக்குமே துணையா இருக்கும். நீங்க எதுக்கும் தயங்காதீங்க. சரின்னு சொல்லுங்க ஐயா!" என்றார்.

**முடிவுரை :** இறைஞ்சும் தன்மையில் கேட்டதும் ஆறுமுகம் அதிர்ந்து போனார். யாருக்கு யார் உதவி? மலை போன்ற அத்தனை பிரச்சனைகளும் எப்படி இப்படி ஒரே நாளில் தீர்வு கண்டு குழந்தையுடன், தன்னையும் சுவீகரித்துக் கொண்டு என எண்ணியபடி கண்ணீருடன் கைகூப்பினார் ஆறுமுகம். பெற்றோர் இல்லாத பிள்ளைகளும் பிள்ளைகள் இல்லாத பெற்றோரும் ஏதிலி நிலையில் தவிப்பவர்கள்தான். அவர்களையும் ஏற்று அரவணைக்கும் இக்கதைமாந்தர் போல் இருந்தால் மனித நேயம் மேம்படும்.

**அல்லது**

ஆ) **முன்னுரை :** முத்தையன், வெள்ளைச்சாமி இருவரும் சகோதரர்கள். வெள்ளைச்சாமி தன் அண்ணியைப் பெற்றத் தாயாக எண்ணி வளர்ந்தவன். திருமணத்திற்குப் பிறகு கொஞ்சம் மாறிப் போனான். பாகம் கேட்டுப் பங்கு பிரித்துக் கொண்டு சென்றான். ஒருமுறை வெள்ளைச்சாமி அவனுடைய அவசரத் தேவைக்காக வெளியூரில் பங்காருசாமி என்பவரிடம் இருநூறு ரூபாய் வாங்கியிருந்தான். அதற்கு ஈடாக தன் நிலத்தைக் கொடுத்திருந்தான்.

**முத்தையனின் பாசம் :** தம் தம்பியின் நிலம் பறிபோய்விடக் கூடாது என எண்ணிய முத்தையன் பங்காரு சாமியிடம் பேசியபோது அவர் நானூறு ரூபாய் என்று கூறினார். முத்தையன் விவாதித்துவிட்டு வந்துவிட்டான். பங்காருசாமிக்கு எப்படியாவது அந்த நிலத்தை அடையலாம் என்ற எண்ணம். அடுத்தநாள் நிலத்திற்கே சென்று "அந்த நிலம் தனக்கே உரியது" என்று கத்தினார். முத்தையன் பதிலுக்கு மிரட்டியதில் பயந்து போய் ஓடி விட்டார் பங்காருசாமி.

**'உரிமைத்தாகம்' கதையில் சகோதரர்கள் இருவரும் ஒன்றிணையாமல் இருந்திருந்தால்...**

"டேய்... வெள்ளைச்சாமி... வெள்ளைச்சாமி...." என மிரட்டும் வகையில் கூப்பிட்டார் மேலூர் பங்காரு சாமி. "என்னடா நினைத்துக் கொண்டிருக்கிறாய்... பணத்தை வாங்கிக்கொண்டு இரண்டு வருஷமாச்சு. அசலும் தரல, வட்டியும் தரல. என்னடா...?"

"அய்யா ஒரு மாசம் அவகாசம் குடுங்க எல்லாத்தையும் நான் தந்துடறேன்." என்றான் வெள்ளைச்சாமி.

"நீ இதையே... இரண்டு வருஷமா சொல்ற.... இது வேலைக்கு ஆகாது."

"அய்யா கொஞ்சம் அவகாசம் குடுங்க. நான் சீக்கிரம் திருப்பிடறேன்."

"அதெல்லாம் முடியாது, இப்பவே வா என்கூட ரிஜிஸ்டர் ஆபிஸ்க்கு" என வெள்ளைச்சாமியின் சட்டையைப் பிடித்து இழுத்துக் கொண்டு போனார். வெள்ளைச்சாமியும் அழுதுகொண்டே போனான். நஞ்சை நிலத்தையும் எழுதிக் கொடுத்துவிட்டு வந்து வீட்டின் மூலையில் அமர்ந்து அழுது கொண்டே இருந்தான்.

**முடிவுரை :** முத்தையனும் தன் தம்பியின் முன்னேற்றத்தைப் பற்றி எண்ணியிருக்கமாட்டான். அவன் யாரிடம் ஏமாந்து போனால் நமக்கென்ன என்று இருந்திருப்பான். வெள்ளைச்சாமி பொருள்களை எல்லாம் இழந்து தன் நிலத்திலேயே கூலிக்கு வேலை செய்திருப்பான்.

## பகுதி - V

47.

அ) ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி
ஏங்கொலிநீர் ஞாலத்(து) இருளகற்றும் - ஆங்கவற்றுள்
மின்னேர் தனியாழி வெங்கதிரொன்(று) ஏனையது
தன்னேர் இலாத தமிழ். **பா வகை : நேரிசை வெண்பா**

**– தண்டி**

ஆ) மறத்தல் வெகுளியை யார்மாட்டும்; தீய
பிறத்தல் அதனான் வரும். **– திருவள்ளுவர்**

☆ ☆ ☆

enquiry@surabooks.com PH:8124201000 / 8124301000
Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com